**செய்தி வெளியீடு எண்: 646** **நாள்:29.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2012–ஆம் ஆண்டு 60 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதையொட்டி, சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்கும் தலைமைச் செயலகத்திற்கும் இடையில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவிற்கு இன்று (29.10.2012) அடிக்கல் நாட்டினார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952–ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2012–ஆம் ஆண்டு 60 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு வைர விழா சிறப்புடன் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவினையொட்டி மக்கள் என்றென்றும் நினைவு கொள்ளும் வகையில் சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்கும் தலைமைச் செயலகத்திற்கும் இடையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவிற்கு இன்று அடிக்கல் நாட்டினார்கள். மேலும், கலைநயம் மிக்க தோரண வாயிலின் மாதிரி வடிவமைப்பினையும் திறந்து வைத்தார்கள்.

புதியதாக அமைக்கப்படவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு 80 அடி அகலமும், 41 அடி உயரமும் கொண்டதாக இருப்பதுடன், பாரம்பரியம் மற்றும் நவீன கட்டடக்கலை நுட்பத்திறனை உள்ளடக்கியும் கட்டப்படவுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தியவாறு, இந்த நினைவு வளைவு கட்டுமானப்பணி, குறிப்பிட்ட காலகெடுவுக்குள், சிறந்த முறையில் கட்டி முடிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைக் கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலாளர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 29.10.2012